பிரதம செயலாளர் செயலகம்,வடக்கு மாகாண சபை
ප්‍රධාන ලේකම් කාර්යාලය, උතුරු පළාත් සභාව
Chief Secretary's Secretariat, Northern Provincial Council

மாகாணசபை வளாகம், A9 வீதி, கைதடி
පළාත් සභාව සංකීර්ණය, A9 පාර, කයිතඩි
Provincial Council Complex , A9 Road, Kaithady

Telephone : 021 222 0843 (Dir)
: 021 222 0840 (Gen)
Fax : 021 222 0841
Website : www.np.gov.lk
e-mail : chiefsecnpc@gmail.com

எனது இல :- NP/09/A&P/04/12/CIR/2020 18.12.2020

மாகாண நிதிச் சுற்றுநிருபம் இல :- **PF/AP/04/2020**

செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வடக்கு மாகாணம்

## குறைநிரப்பு விழாக்கால கடன் திட்டம்

மேற்படி விடயம் தொடர்பாக, செயலாளர் பொதுச் சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அவர்களின் 22/2020 ஆம் இலக்க 2020.12.16 ஆம் திகதிய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைக்கமைவாக, நத்தார் மற்றும் புதுவருடப் பிறப்புடன் ஆரம்பிக்கும் விழாக்காலத்தை முன்னிட்டு அரசாங்க ஊழியர்களுக்கு 0.625% மாதாந்த வட்டிக்கு 10 மாதங்களில் மீளச் செலுத்த வேண்டுமென்ற நிபந்தனைக்கு உட்பட்ட வகையில் குறைநிரப்பு விழாக் காலக் கடன்களை அரச வங்கிகள் ஊடாக வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02. இதன் அடிப்படையில் வழங்கப்படும் குறைநிரப்பு விழாக் காலக் கடன் பின்வருமாறு மூன்று வகுதிகளைக் கொண்டிருக்கும்.

அ) மாதாந்தம் ரூபா 50,000/- அல்லது அதற்கு மேற்பட்ட சம்பளம் பெறும் ஊழியர்கள் ரூபா 50,000/- கடன் தொகை.

ஆ) மாதாந்தம் ரூபா 25,000/- இற்கு மேற்பட்ட எனினும் ரூபா 50,000/- இற்கு குறைந்த சம்பளம் பெறும் ஊழியர்கள் ரூபா 25,000/- கடன் தொகை.

இ) மாதாந்தம் ரூபா 25,000/- இற்கு குறைந்த சம்பளம் பெறும் ஊழியர்கள் ரூபா 10,000/- கடன் தொகை.

03. எனவே மாகாண அரசாங்க ஊழியர்கள் இந்த குறைநிரப்புக் கடனைப் பெற்றுக்கொள்வதை இலகுபடுத்துவதற்காக அனைத்து நிறுவனங்களினதும் தலைவர்கள் தமது நிறுவனங்களின் ஊழியர்களின் சான்றுப்படுத்திய பெயர்ப்பட்டியல்களை தமது சேவை நிலையத்திற்கு அண்மையில் உள்ள அரசாங்க வங்கியொன்றுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அதன் அடிப்படையில் குறித்த வங்கியினால் கோரப்பட்ட குறைநிரப்புக் கடன் தொகை ஊழியர்களுக்கு வங்கிக்கணக்குகளில் வைப்புச் செய்யப்படும்.

பிரதிப் பிரதம செயலாளர்
නියෝජ්‍ය ප්‍රධාන ලේකම්
DEPUTY CHIEF SECRETARY

நிர்வாகம் / පරිපාලන / ADMINISTRATION — Tel : 021 320 2571 (Dir) : 021 222 0960 (Gen) Fax : 021 222 0950 e-mail : ppas.np@gmail.com

நிதி / මුදල් / FINANCE — Tel : 021 222 0850 (Dir) : 021 222 0854 (Gen) Fax : 021 222 0853 e-mail : nptreasury@gmail.com

திட்டமிடல் / ක්‍රමසම්පාදන / PLANNING — Tel : 021 223 0355 (Dir) : 021 223 0451 (Gen) Fax : 021 223 0354 e-mail : npplan@sltnet.lk

ஆளணிப்பயிற்சி / පිරිස් පුහුණු / PERSONNEL TRAINING — Tel : 021 739 1250 (Dir) : 021 739 1254 (Gen) Fax : 021 739 1257 e-mail : npmdti@gmail.com

பிரதமஉள்ளகக்கணக்காய்வாளர் / ප්‍රධාන අභ්‍යන්තර විගණක / CHIEF INTERNAL AUDITOR — Tel : 021 222 0796 (Dir) : 021 222 9528 (Gen) Fax : 021 222 0796 e-mail : npcaudit@yahoo.com

04. மேலே 03ம் பந்தியில் குறிப்பிடப்பட்டதற்கமைய வழங்கப்படும் கடன்களையும் அவற்றுக்கான வட்டிகளையும் நிறுவனத் தலைவர்கள் 2021 ஜனவரி மாதம் முதல் 2021 ஒக்ரோபர் 31 ஆம் திகதி வரையான 10 மாத காலத்தினுள் ஊழியர்களின் சம்பளத்திலிருந்து சம தவணைகளாக அறவிட்டு கடன் வழங்கிய வங்கிக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

05. இந்த குறைநிரப்பு விழாக் காலக் கடன்களை விரைவாக வழங்குவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அ.பத்திநாதன்
பிரதம செயலாளர், வ.மா

அ. பத்திநாதன்
பிரதம செயலாளர்
வடக்கு மாகாணம்

பிரதி: 1. உதவிக் கணக்காய்வாளர் நாயகம், தேசிய கணக்காய்வு அலுவலகம், வ.மா
2. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், மாகாணக் கணக்காய்வு அலுவலகம், வ.மா
} தகவலுக்காக

பிரதம செயலாளர் / ප්‍රධාන ලේකම් / Chief Secretary
Tel : 021 222 0843 (Dir)
: 021 222 0840 (Gen)
Fax : 021 222 0841
E-mail: chiefsecnpc@gmail.com

பிரதிப் பிரதம செயலாளர் / නියෝජ්‍ය ප්‍රධාන ලේකම් / Deputy Chief Secretary
Tel : 021 222 0850 (Dir)
: 021 222 0854(Gen)
Fax : 021 222 0853
E-mail: npctreasury@gmail.com